# உங்களுக்கு ஆயுட் காப்புறுதி பற்றித் தெரியுமா?



## ஆயுட் காப்புறுதி என்றால் என்ன ?

ஆயுட் காப்புறுதி என்பது வாழ்கையில் இடம்பெறக்கூடிய ஏதேனும் எதிர்பார்க்க முடியாத இடரினைக் குறைப்பதற்காக காப்புறுதி நிறுவனத்துடன் இணைந்து மேற்கொள்ளும் ஓர் சட்ட ரீதியான ஒப்பந்தமாகும். இதன் போது, காப்புறுதி பூட்கை உரிமையாளர் இறந்துவிட்டால் அல்லது முழுமையான அல்லது பகுதியளவில் அங்கவீனமடைந்தால் அல்லது காப்புறுதிப் பூட்கை முதிர்ச்சியடைந்தால், ஆயுட் காப்புறுதிப் பூட்கையின் நன்மைகள் காப்புறுதி உரிமையாளருக்கு அல்லது அவரினால் நியமிக்கப் பட்ட பயனாளிக்கு உரித்தாகும்.

## ஏன் ஆயுட் காப்புறுதியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்?

உங்களுக்கு ஏதேனும் ஆபத்து அல்லது சிக்கல்கள் ஏற்பட்டால், உங்கள் குடும்ப அங்கத்தவர்கள் தமது வாழ்க்கையை கொண்டு நடாத்துவதற்கு நிதியுதவியை வழங்கும் ஓர் வழி முறையாகும். ஓய்வூதியம் பெறும் தினத்தில் ஒரே தடவையில் அல்லது தொடர்ச்சியான வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கான சேமிப்பு முறையாகும். இதன் மூலம் பிள்ளைகளின் கல்வி நடவக்கைகளுக்கு அவசியமான பணத்தை செலுத்த முடிவதுடன் நோய்வாய்ப்படும் போது அல்லது இயலாமல் போகும் போது அவசியமான நிதி உதவி கிடைக்கப்பெறும்.



## பொருத்தமான காப்புறுதிப் பூட்கையை தேர்ந்தெடுப்பது எவ்வாறு?

ஆயுட் காப்புறுதியை தேர்ந்தெடுக்கும் போது உங்கள் தேவைக்கு பொருத்தமான, தங்களினால் தொடர்ச்சியாக கொடுப்பனவு செய்யக்கூடிய தவணைக் கட்டணத்தில் காப்புறுதியைப் பெற்றுக்கொள்ளல் மிக முக்கியமானதாகும். மேலதிக தகவல்கள் அவசியமாயின் பதிவுசெய்யப்பட்ட காப்புறுதி நிறுவனத்தில், தரகு நிறுவனத்தில் அல்லது காப்புறுதி ஆலோசனையாளரிடமிருந்து அவசியமான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.







**இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு**

11 வது மாடி, கிழக்கு கோபுரம், உலக வர்த்தக மையம்,
கொழும்பு 01.
தொலைபேசி : (011) 2396184-9 தொலைநகல்: (011) 2396190
மின்னஞ்சல் info@ircsl.gov.lk இணையம் www.ircsl.gov.lk